# பாகம் - அ

# இந்திய ஒப்பந்தச் சட்டம் - 1872

# [INDIAN CONTRACT ACT - 1872]

## 1. ஒப்பந்தத்தின் இயல்புகள்

[அனைத்து ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளாகும் ஆனால் அனைத்து உடன்படிக்கைகளும் ஒப்பந்தமாகாது]

(பிரிவு 10)

**[CHARACTERISTICS OF A CONTRACT]**

**[ALL CONTRACTS ARE AGREEMENTS, BUT ALL AGREEMENTS ARE NOT CONTRACTS]**

**(Sec. 10)**

(மிகவும் முக்கியம்)

**பாடச் சுருக்கம்: (SYNOPSIS)**

**அ. ஒப்பந்தம் என்பதன் வரைவுரை**

**ஆ. உடன்பாடு**

**இ. செல்லத்தக்க ஒப்பந்தத்தின் இன்றியமையாமைகள் (பிரிவு 10)**

1. "தன்னிச்சையான இசைவு"
2. ஒப்பந்தம் செய்ய தகுதி / தரப்பினர்களின் தகவுடைமை
3. சட்டப்பூர்வ மறுபயன்
4. சட்டப்பூர்வ செயல் இலக்கு அல்லது நோக்கம்
5. செல்லத்தக்கதல்ல என அறிவிக்கப்படாத உடன்பாடுகள்

**ஈ. இதர இன்றியமையாமைகள் அல்லது தேவையான அம்சங்கள்**

1. இரண்டு தரப்பினர்கள்
2. உறுதித்தன்மை



3. சட்டப்பூர்வ சம்பிரதாயங்கள்
4. சட்டப்பூர்வ கடப்பாடு உருவாக்குவதற்கான எண்ணம்
5. நிறைவேற்றக் கூடிய தன்மை
6. கருத்தொன்றுதல் "ஒருமித்த மனம்"

**உ. முடிவுரை**

## அ. ஒப்பந்தம் என்பதன் வரைவுரை : (DEFINITION OF CONTRACT)

1. "சட்டத்தினால் நடைமுறைப்படுத்தக் கூடிய உடன்படிக்கையே ஒப்பந்தமாகும்" என இந்திய ஒப்பந்தச் சட்டம் என்று [பிரிவு 2 (h)] ல் கூறப்பட்டுள்ளது.

2. "சட்டப்படி செயல்படுத்தக்கூடிய ஒவ்வொரு உடன்படிக்கையும் மற்றும் வாக்குறுதியும் ஒப்பந்தமாகும்" என பொல்லாக் (Pollock) கூறுகிறார்.

3. **சர் வில்லியம் ஆன்சன் (Sir William Anson)** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களிடையே அவர்களைச் சட்டப்படி கட்டுப்படுத்தக் கூடிய உடன்படிக்கையே ஒரு ஒப்பந்தம் ஆகும் என்றும் இதன் மூலம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு செயல்கள் புரிவதற்கு உரிமைகள் கிடைக்கின்றது அல்லது மற்றவர்கள் செயல் புரியாமலிருப்பதற்கான உரிமைகள் கிடைக்கின்றது என்றும் கூறுகிறார்.

4. **சர் சால்மண்ட் (Sir Salmond)** கூற்றுப்படி ஒப்பந்தம் என்பது இரு தரப்பினர்களிடையே கடப்பாடுகளை நிர்ணயிப்பதும் மற்றும் உண்டாக்குவதுமான உடன்படிக்கையாகும்.

**உ–ம்:** ஒரு குறிப்பிட்ட தேதியில் 'எ' தனது மோட்டார் வாகனத்தை **(car)** 'பி' க்கு ரூ.10,000–க்கு விற்க ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 'எ' பின்பு அதன்படி நடக்கவில்லை. 'பி' ஒப்பந்தத்தை நீதிமன்றத்தின் மூலம் நிறைவேற்றக் கோரலாம்.

## ஆ. உடன்பாடு: (AGREEMENT)

1. ஒரு முன்மொழிவு (முனைவு) ஏற்பவரால் ஏற்க்கப்பட முடியும் என்றால், பின் அது முன்மொழிபவரின் (முனைபவர்) தரப்பில் ஒரு உறுதியுரை அல்லது வாக்குறுதி ஆகிறது.

2. ஒருவருக்கொருவர் மறுபயன் அளிக்கக் கூடிய ஒவ்வொரு உறுதியுரையும் அல்லது அடுக்கான உறுதியுரைகளும் உடன்படிக்கையாகும். (பிரிவு 2 (இ))

3. முன்மொழிவானது செய்யப்பட்ட நபர் எப்போது தன்னுடைய இசைவை தெரிவிக்கின்றாரோ அப்போது அந்த முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்டதாகிறது. ஒரு முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்படும் பொழுது அது ஒரு உறுதியுரையாகிறது. [பிரிவு 2 (ஆ)] என விளக்கப்படுகிறது.

4. பின்வருபவை உடன்பாடு மற்றும் ஒப்பந்தத்திற்கான விதிமுறைகள்:

   உடன்பாடு = முனைவு + ஏற்றுக்கொள்ளுதல்
   ஒப்பந்தம் = உடன்பாடு + சட்டத்தின் செயலாக்கம்.

எனவே அனைத்து உடன்பாடுகளும் ஒப்பந்தங்கள் அல்ல. ஆனால் அனைத்து ஒப்பந்தங்களும் உடன்பாடுகள் ஆகும்.

5. ஒரு ஒப்பந்தத்தின் சாராம்சமானது இரு தரப்பினர்களின் மனதின் கருத்தொருமைப்பாடாகும். அதாவது உடன்பாட்டின் நிபந்தனைகள் போன்றவை குறித்து இருதரப்பினர்களுக்கும் ஒரே வகையான எண்ணமும், அறிவும் இருக்க வேண்டும் என்பதாகும். ஒப்பந்தங்களின் சட்டமானது உடன்பாடுகளின் மொத்த சட்டமோ கடப்பாடுகளின் மொத்த சட்டமோ அல்ல.

பொதுவாக சட்டபூர்வ கடப்பாடுகளை உருவாக்காத பல உடன்பாடுகள் உள்ளன. ஆகவே அவை ஒப்பந்தங்கள் அல்ல.



அதே போல் சில கடப்பாடுகள் உடன்பாட்டிலிருந்து வரவேண்டிய கட்டாயம் இல்லை. (உ.ம்) (i) உரிமைத் தீங்குகள் அல்லது உரிமையியல் தீமைகள் (ii) போலமை ஒப்பந்தங்கள் (iii) நீதிமன்றங்களின் தீர்ப்புரைகள் போன்றவைகளாகும்.

இவ்வகை கடப்பாடுகள் இயல்பில் ஒப்பந்த தன்மையுடையவை அல்ல. ஆனால், செயலாக்கப்படக் கூடியவையேயாகும்.

“ஒப்பந்த சட்டமானது உடன்பாடுகளின் மொத்த சட்டமும் அல்ல மற்றும் அது கடப்பாடுகளின் மொத்த சட்டமும் அல்ல. இது கடப்பாடுகளை உருவாக்கும் அந்த உடன்பாடுகள் மற்றும் உடன்பாடுகளில் தங்களின் ஆதாரங்களை வைத்திருக்கும் அந்த கடப்பாடுகளின் சட்டமாகும்” என சால்மாண்ட் சரியாகவே கணித்திருக்கிறார்.

இயல்பில் ஒப்பந்த தன்மையில்லாத அனைத்து கடப்பாடுகள் மற்றும் இயல்பில் சமூகத்தன்மையுடன் இருக்கும் உடன்பாடுகளையும் இது உள்ளடக்குகின்றது.

## இ. செல்லத்தக்க ஒப்பந்தத்தின் இன்றியமையாமைகள் (பிரிவு 10): [ESSENTIALS OF A VALID CONTRACT (Sec. 10)]

இந்திய ஒப்பந்த சட்டம் 1872 ன் பிரிவு 10 ஆனது செல்லத்தக்க ஒப்பந்தத்தின் இன்றியமையாமைகளை விவரிக்கிறது.

பிரிவு 10–ன் படி செல்லத்தக்கதல்ல என சட்டப்படி வெளிப்படையாக அறிவிக்கப்படாத மற்றும் ஒரு சட்டபூர்வ செயல் இலக்கு மற்றும் ஒரு சட்டபூர்வ மறுபயனுக்காக ஒப்பந்தம் செய்ய தகுதியுடைய தரப்பினர்களின் தன்னிச்சையான இசைவின் மூலம் செய்யப்படும் அனைத்து உடன்பாடுகளும் ஒப்பந்தங்களாகும்.

ஒரு உடன்பாடு ஒரு ஒப்பந்தமாக மாறுவதற்கு பின்வரும் இன்றியமையாமைகள் (11 தேவையானவை)

## 1. தன்னிச்சையான இசைவு: (FREE CONSENT)

ஒப்பந்தம் ஒன்றின் உருவாக்கத்திற்கு தரப்பினர்கள் தங்களின் தன்னிச்சையான இசைவை அளித்திருக்க வேண்டும். இசைவு என்றால் ஒருபொருட்கூறை ஒரே உணர்வு மற்றும் ஒரே நேரத்தில் எற்றுக் கொள்ளுதல் ஆகும். ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் குறித்து இருதரப்பினர்களுக்கும் ஒரே மனம் மற்றும் எண்ணம் இருக்க வேண்டும்.

தன்னிச்சையான இசைவு இல்லாதபோது உடன்பாடு இல்லாநிலையது அல்லது தவிர்தகுநிலையை அடைகிறது. தவறு, வலுக்கட்டாயம், தகாநிலை வற்புறுத்தல், மோசடி, பொய்க்கூற்று போன்றவைகளினால் ஒரு தன்னிச்சையான இசைவானது நலக்கேட்டிற்கு உள்ளாகிறது.

(உ–ம்) 'அ' என்பவரை கைத்துப்பாக்கியைக் காட்டி, பயமுறுத்தி அவரை கடன் பத்திரத்தில் கையெழுத்து இடவைத்தல். இங்கு அ வின் இசைவு தன்னிச்சையானது அல்ல. எனவே இது ஒரு தவிர்தகு ஒப்பந்தம்.

### ரங்கநாயகம்மா எதிர் ஆழ்வார்செட்டி:
### *(Ranganayakamma Vs. Alwarchetti)*

13 வயதான ஒரு இளம் விதவை, ஒரு பையனைத் தத்தெடுக்காவிடில் அவளது கணவனின் சடலத்தை சுடுகாட்டிற்கு எடுத்துச்செல்ல அனுமதிக்க முடியாது என பயமுறுத்தி, தத்தெடுக்கச் செய்தனர். தத்தெடுப்பதற்கான இசைவானது கட்டாயப்படுத்திப் பெறப்பட்டதால் இது தள்ளுபடி செய்யப்பட்டது.

## 2. ஒப்பந்தம் செய்ய தகுதி / தரப்பினர்களின் தகவுடைமை : (COMPETENT TO CONTRACT / CAPACITY OF PARTIES)

நபர் ஒருவர் பொருளாதார ரீதியில் நொடிப்பு நிலை அடைந்து விட்டார் என சட்டம் அறிவித்தாலன்றி ஒப்பந்தம் செய்ய தகுதி.



தரப்பினர்களின் தகவுடைமை என்ற பதமானது உடல் மற்றும் மனதளவிலான தகவுடைமையை குறிக்கும். பொருளாதார தகவுடைமையை அல்ல.

உடன்பாட்டிற்கான தரப்பினர்கள் செல்லத்தக்க ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ள தகுதியுடைவர்களாக இருக்க வேண்டும். அதாவது ஒரு ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியுடையவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

ஒரு இளவர், ஒரு பித்தன், முட்டாள், குடிகாரர்கள் மற்றும் நொடிப்பு நிலையில் உள்ளவர்கள் போன்ற சட்டபூர்வமாக தகுதியிழக்கப்பட்ட எந்த நபரும் அவர்களது தகுதியின்மையினால் ஒரு செல்லத்தக்க ஒப்பந்தம் செய்து கொள்ள ஏலுமையில்லை. (Not eligible)

18 வயது பூர்த்தியாகாத நபரே இளவர் ஆவார். ஒரு இளவருடன் அல்லது இளவர் மூலம் ஒரு உடன்பாடு என்பது அடிமுதலே இல்லாநிலையது. (துவக்கத்திலிருந்தே செல்லத்தகாதது.)

### மொகிரிபீபீ எதிர் தர்மோதாஸ் கோஸ் :
### *(Mohiribibi Vs. Dharmodas Ghosh)*

இளவர் ஒருவர் ரூ.20,030/–ற்கு அடைமானம் ஒன்றை செய்தார். அந்த அடைமானத்தின் பிணையின் மீது கடன் கொடுப்பவர் ரூ. 8,000/– அளித்திருந்தார்.

இளவர் ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல என்பதால் அந்த அடைமானத்தை நீக்கறவு செய்ய இளவர் வழக்கு தொடர்ந்தார். இளவர் மூலமான ஒப்பந்தம் அடிமுதலே இல்லாநிலையது மற்றும் கடன் கொடுப்பவரால் கொடுக்கப்பட்ட எந்த தொகையும் இளவரிடமிருந்து பெற முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

### 3. சட்டப்பூர்வ மறுபயன்: [LAWFUL CONSIDERATION]

ஒவ்வொரு உடன்பாடும் பணவழிமறுபயனால் ஆதரிக்கப்பட வேண்டும். மறுபயன் என்றால் பதிலாக ஏதாவது பெறுவது ஆகும். மறுபயன் இருப்பதற்கு ஒப்பந்தத்திற்கான தரப்பினர்கள் இருவரும் சிறிது லாபம் மற்றும் சிறிது நஷ்டம் கொண்டிருக்க வேண்டும். தரப்பினரில் ஒருவருக்கு எப்பொழுதும் லாபம் கிடைத்து மற்றொரு தரப்பினருக்கு எப்பொழுதும் நஷ்டமே கிடைத்தால் பின் அங்கு மறுபயன் என்று எதுவும் இல்லை.

ஒவ்வொரு உடன்பாட்டிற்கும் பணத்தின் மறுபயன் என்பது எப்பொழுதும் பணமாகவோ அல்லது பொருளாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை.

மேலும் மறுபயனானது நிறைவேற்றப்பட வேண்டியதாகவோ, நிறைவேற்றப்பட்டதாகவோ அல்லது முந்தையதாகவோ இருக்கலாம். இருப்பினும், அது உண்மையானதாக இருக்க வேண்டும், தெளிவற்றதாக இருக்கக்கூடாது. அது சட்ட முரணானதாக இருந்தால் உடன்படிக்கை இல்லாநிலையதாகிறது.

(உ.ம்) 'எ' 'பி' க்கு 'டி' யை கொலை செய்வதற்காக ரூ. 2,00,000/- தருவதாக உறுதியுரை அளிக்கிறார். இந்த மறுபயன் சட்ட விரோதமானதாகும்.

**அப்துல் அஜிஸ் எதிர் மாசும் அலி : *(Abdul Aziz Vs. Masum Ali)***

'அ' என்பவர் 'ஆ' என்பவரிடம் ஒரு மசூதியை மறுபடியும் கட்டுவதற்காக பணம் நன்கொடையாக அளிப்பதாக உறுதியுரை அளித்தார். ஆனால் பின்னர் அவர் அந்த தொகையை அளிக்க தவறினார். இங்கு மறுபயன் எதுவும் இல்லாததால் ஒப்பந்தம் செல்லாது என தீர்ப்பளிக்கப்பட்டது.



### 4. சட்டபூர்வ செயல் இலக்கு (அ) நோக்கம் : (LAWFUL OBJECT)

உடன்படிக்கையின் நோக்கம் சட்டப்படியானதாக இருக்க வேண்டும். இது சட்ட விரோதமாகவோ அல்லது ஒழுக்கக்கேடானதாகவோ அல்லது பொதுக் கொள்கைக்கு எதிராகவோ இருக்கக் கூடாது.

**பியர்ஸ் எதிர் புரூக்ஸ்: *(Pearce Vs. Brookes)***

வாகனம் தயாரிக்கும் தொழில் கூட்டமைப்பு ஒன்று ஒரு விலைமகளுக்கு வாகனம் ஒன்றை வாடகைக்கு அளித்தது. அந்த வாகனம் ஆண்களை கவர்வதற்காக அந்த விலைமகளால் உபயோகப்படுத்தப்படும் என்பது தெரிந்தே வாடகைக்கு விட்டனர்.

அந்த விலைமாதும் வாடகை கட்டணத்தை செலுத்த தவறினாள். அந்த உடன்பாடு ஒரு சட்ட முரணான செயல் இலக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதால் வாகன தயாரிப்பாளர்கள் வாடகையை வசூலிப்பதற்கு நீதிமன்றத்தை அணுக முடியாது என நீதிமன்றம் கூறியது.

### 5. செல்லத்தக்கதல்ல என அறிவிக்கப்படாத உடன்பாடுகள்: (AGREEMENTS NOT DECLARED VOID)

நாட்டில் உள்ள எந்த ஒரு சட்டத்தினாலும் வெளிப்படையாக உடன்படிக்கையானது செல்லாதென அறிவிக்கப்பட்டிருத்தல் கூடாது. உதாரணமாக சூது நிறைந்த ஒப்பந்தம், வாணிபத்தை தடைசெய்யும் உடன்பாடு ஆகியவை அனைத்தும் இந்திய ஒப்பந்த சட்டத்தின்படி செல்லத்தக்கதல்ல என அறிவிக்கப்பட்டவை.

செல்லத்தக்கதல்ல என அறிவிக்கப்படாத அவ்வகை ஒப்பந்தங்கள் மட்டுமே செல்லத்தக்க ஒப்பந்தங்கள் ஆகும். இவை நீதிமன்றத்தில் செயல்படுத்தப்படக்கூடியவை.

## ஈ. இதர இன்றியமையாமைகள் (அ) தேவையான அம்சங்கள்: (OTHER ESSENTIALS)

### 1. இரண்டு தரப்பினர்கள்: (Two parties)

ஒரு ஒப்பந்தமானது சட்டப்படி கட்டுப்படுத்தும் ஒரு உடன்படிக்கையாகும். நபர் ஒருவர் ஒரு முன்மொழிவை செய்கிறார் – மற்ற நபர் (அதாவது அந்த முன் மொழிவு (முனைவு) அளிக்கப்பட்ட நபர்) அதனை ஏற்றுக் கொள்கிறார். அதன்படி ஒரு ஒப்பந்தமானது உருவாகிவிடுகிறது. இவ்வாறு ஒரு ஒப்பந்தத்தின் செயல்பாடுகளில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் இருக்க வேண்டும்.

### 2. உறுதித்தன்மை : (Certainty)

செல்லத்தக்க ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க ஒரு உடன்பாடானது உறுதியுள்ளதாகவும் மற்றும் நிச்சயமானதாகவும் இருக்க வேண்டும். ஒப்பந்தத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பிட்டதாகவும் மற்றும் உறுதியாகவும் இருக்க வேண்டும்.

உதாரணமாக ‘அ’ என்பவர் தனது வ ீட்டை ‘ஆ’ என்பவருக்கு விற்க சம்மதிக்கிறார். ஆனால் ‘அ’ என்பவர் அவருடைய எந்த வ ீட்டை ‘ஆ’ என்பவருக்கு விற்கப் போகிறார் என்று சரியாக கூறவில்லை. இங்கு உடன்பாட்டின் நியதிகள் உறுதியாக இல்லாததால் இந்த உடன்பாடு செல்லத்தக்கதல்ல.

### 3. சட்டபூர்வ சம்பிரதாயங்கள்: (Legal Formalities)

ஒரு ஒப்பந்தமானது வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ செய்யப்படலாம். ஆனால் முத்திரைத்தாளில் எழுத்துவடிவில் ஒப்பந்தம் இருக்க வேண்டுமென மற்றும் / அல்லது பதிவு செய்யப்படவும் கோரினால் அத்தகைய சட்டமுறை சம்பிரதாயங்கள் இணங்கப்பட வேண்டும். அதன் பின்னரே உடன்பாடானது ஒரு செல்லத்தக்க ஒப்பந்தமாக மாறுகிறது.



### 4. சட்டபூர்வ கடப்பாடு உருவாக்குவதற்கான எண்ணம் : (Intention to create legal obligation)

உடன்படிக்கையில் ஈடுபடும் தரப்பினர்கள் சட்டபூர்வ உறவுமுறையை உருவாக்குவதற்கான எண்ணம் கொண்டிருக்க வேண்டும். அவ்வகை எண்ணம் இல்லை என்றால் அவர்களிடையே எந்த ஒப்பந்தமும் இல்லை.

உதாரணமாக: திருமணத்திற்கு அழைத்தல், விருந்திற்கு அழைத்தல் போன்றவைகளில் சட்டமுறை உறவுமுறையை உருவாக்கும் எண்ணம் இல்லாமையால் அவைகள் அனைத்தும் சமூக உடன்பாடுகள் மட்டுமே ஆகும்.

### பால்போர் எதிர் பால்போர் : *(Balfour Vs. Balfour)*

கணவன் தனது மனைவிக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகை (30$) அனுப்புவதாக அவர்கள் இருவரிடையே ஏற்பட்ட ஒரு உடன்பாடானது எந்த சட்டமுறை உறவு முறையையும் உருவாக்காத ஒரு இயல்பான உடன்பாடாகும். எனவே இந்த உடன்பாட்டினை மனைவி சட்டப்படி செயல்படுத்த முடியாது.

### 5. நிறைவேற்றக் கூடிய தன்மை : (Capable of Performance)

உடன்பாட்டின் நியதிகளானது நிறைவேற்றப்படக் கூடியதாக இருக்க வேண்டும். செய்ய முடியாத ஒரு செயலை செய்வதற்கு ஒரு உடன்பாடு ஏற்பட்டால் பின் அவ்வகை உடன்பாடு இல்லா நிலையது ஆகும்.

(உ–ம்) ‘அ’ என்பவர் மந்திரத்தின் மூலம் புதையலை கண்டுபிடிப்பதாக ‘ஆ’ என்பவரிடம் ஒப்புக் கொள்கிறார். செய்ய முடியாத செயலை செய்வதற்கான அவ்வகை உடன்பாடு இல்லாநிலையது ஆகும்.

### 6. கருத்தொன்றுதல்: (ஒருமித்த மனம்)

### [CONSENSUS AD-IDEM : (IDENTITY OF MIND)]

தரப்பினர்கள் ஒப்பந்தத்திற்கான பொருளை ஒரு மனதோடும் ஒரே எண்ணத்தோடும் ஒப்புக் கொள்ள வேண்டும். உதாரணமாக அ என்பவரிடம் சான்ட்ரோ ஒன்று, மாருதி ஒன்று என இரண்டு மோட்டார் வாகனங்கள் இருந்தது.

'அ' என்பவர் தன்னுடைய சான்ட்ரோ மோட்டார் வாகனத்தை ஆ என்பவருக்கு விற்க முனைவு செய்கிறார். ஆனால் 'ஆ' என்பவர் 'அ' என்பவரிடம் மாருதி மோட்டார் வாகனம் மட்டும் தான் உள்ளது என்ற நம்பிக்கையில் அந்த வாகனத்தை வாங்க சம்மதிக்கிறார். இங்கு இரண்டு தரப்பினர்களுமே வேறு வேறு பொருட்கூறினை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இங்கு ஒருமித்த எண்ணம் இல்லை. அதனால் இந்த உடன்பாடு செல்லத்தக்கதல்ல.

### போல்டன் எதிர் ஜோன்ஸ் : *(Boulton Vs. Jones)*

'எ' என்பவர் 'சி' என்பவரிடம் ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன 'பி' என்பவரை 'சி' என நினைத்து அவருடன் ஒப்பந்தம் செய்கிறார். இங்கு கருத்தொன்றுதல் அல்லாத காரணத்தால், இவ்வகை ஒப்பந்தம் இல்லாநிலையாகிவிட்டது.

### உ. முடிவுரை: (CONCLUSION)

மேற்குறிப்பிட்ட அனைத்து 11 இன்றியமையாமைகளும் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே ஒரு உடன்பாடானது ஒரு ஒப்பந்தமாக உருவாகி சட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட முடியும். மேற்குறிப்பிட்ட இன்றியமையாமைகளில் ஒன்று இணங்கப்படவில்லையென்றாலும் பின் உடன்பாட்டை சட்டப்படி செயல்படுத்த முடியாது. அதனால் அது ஒரு ஒப்பந்தமாக முடியாது. இவ்வாறு "அனைத்து உடன்பாடுகளும் ஒப்பந்தங்கள் அல்ல. ஆனால் அனைத்து ஒப்பந்தங்களும் உடன்பாடுகளே" என்னும் பதம் சரியானதாகும்.



### முந்தைய பல்கலைக்கழக வினாக்கள்

1. "எல்லா உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களாகாது. ஆனால் எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளாகும்"– விமர்சனம் செய்க.
2. "சட்டத்தினால் நடைமுறைப்படுத்தக் கூடிய உடன்படிக்கையே ஒப்பந்தமாகும்". ஒப்பந்தம் என்பதற்கு விளக்கம் கூறி செல்லுபடியாகக்கூடிய ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் அல்லது தேவைகள் பற்றி குறிப்பிடுக.
3. ஒப்பந்தம் என்றால் என்ன என்று விளக்குக. இந்திய ஒப்பந்த சட்டதின்படி ஒரு ஒப்பந்தம் செல்லுபடியாவதற்கான முக்கிய தேவைகள் யாவை?
4. செல்லுபடியாகக் கூடிய ஒப்பந்தத்தின் முக்கிய கூறுகளை விளக்குக. எப்போது ஒரு உடன்படிக்கை செல்லுபடியற்றதாகும்?
5. அ. செல்லுபடியாகக் கூடிய ஒப்பந்தத்தின் முக்கிய கூறுகள் யாவை?
   ஆ. 'உறுதியுரை அளிப்பவர்' மற்றும் 'உறுதியுரை பெறுபவர்' என்ற சொற்களை விளக்குக.
6. "ஒப்பந்த சட்டமானது உடன்பாடுகளின் மொத்த சட்டம் அல்ல அல்லது அது கடப்பாடுகளின் மொத்தமும் அல்ல" – சல்மாண்ட் ஆராய்க?
7. "தன்னிச்சையான இசைவின் தேவை ஒரு ஒப்பந்தத்தை நலக்கேடு செய்கிறது மற்றும் அதை இல்லாநிலை அல்லது தவிர்த்தகு நிலையில் அளிக்கிறது"– ஆராய்க?